# 0காசுவின் குமுறல்.

நீலமலையின் நீண்டகால குடிமக்களான 0படகர் இனமக்கள் கால்நடைகளுடன் ஜீவனம் கண்ட காலம் அது. எருமை மந்தையைக் கொண்டு வாழ்வில் வறுமையைப் போக்கிட நித்தமும் உழைத்த தருவாயில் சிறுதானியங்கள் பயிர்செய்ததால் மலைமக்கள் சிறிது பசி ஆறிய தருணம் அது. கால்நடைகளைக் காத்திட 'தோ' எனப்படும் எருமைத் தொழுவங்களை அமைத்து அதைச்சுற்றிப் புல்வீடுகளால் 'அட்டி' எனப்படும் பட்டிகள் அமைத்து வாழ்வைக் கண்டவர்கள் வாழ்க்கையில் வயிறார உணவுண்டு, பளபளப்பான ஆடைகள் உடுத்தி, புல்வீடுகளிலிருந்து ஓட்டுவீடுகளுக்குக் குடி அமர்ந்து, கல்லாப்பெட்டிகளை வீட்டுக்கு வீடு உரித்தாக்கி, வீட்டு நங்கையரின் கழுத்திலும் காதிலும் அணிகலன்கள் ஏந்தி தங்க நங்கையராக்கி, ஆண்களுக்குத் தலைப்பாகை ஏற்றி கவுடர் ஆக்கி அழகு பார்த்திடவே ஐரோப்பிய கண்டத்திலிருந்து ஆங்கிலேயரின் ஆதரவுடன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நீலகிரி மலை ஏறி அட்டித் தோட்டங்களில் தஞ்சமடைந்தேன். நான் வந்த நாள் 0படகர்களின் நன்நாளாகிய மூன்றாம்பிறை நிலா நாள்போலும்?. உலகின் ஒரே நிரந்தர உணவுப் பயிராக உலகமக்களின் பசியைப் போக்கி வரும் நான், நீலகிரியை அடைந்த அன்றே 0படகர் இனமக்களும் உலகச் சமுதாயத்துடன் இணைந்தனர். நான் வந்த நாள் முதல் 0படகர்களின் வாழ்வில் நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் வளர்ச்சி வட்டமிட்டது. வெள்ளை முண்டாசுடன் கவுடர்கள் உதகையில் வலம் வந்தனர். பெண்டிர், கொத்து எனப்படும் ஒற்றைத்துணி ஆடையிலிருந்து முண்டு எனப்படும் இரட்டை வேஷ்டி ஆடையையும் சேர்த்து, கொத்துக்குக் கண்ணிகட்டிய இடத்தில் அலங்கார சட்டம் கட்டி மேல் ரவிக்கையுடன் அணிகலன்கள் ஏந்தி ஜொலிக்கலாயினர். நூற்றி இருபது நாட்களிலேயே நான் பயிராகிவிடுவதால் வாழ்க்கையில் வணிகம் என்பதை என் மூலம் முதன் முதலாக அறிந்தனர். என்னைப் பயிரிட்ட அனைவரது இல்லத்திலும் இன்பம் குடிகொண்டது. நான் நீலகிரியை அடைந்த காலத்தில் ஆயிரங்களில் இருந்த 0படகர் இன மக்கள் தொகை சில லட்சங்களைக் கடந்தது. கால்நடைகளின் கழிவுகள் எனக்கு அமுதாகின. கைம்மாறாக நான் மக்களுக்கு அமுதானேன். பசி, பட்டினி இல்லாத சமுதாயம் உருவாயிற்று. மக்கள் என்னை நேசித்தனர். ஆதலால் நான் நீலகிரி மலை முழுவதிலும் வியாபித்தேன். என்னைப் பயிரிட்ட

விவசாயிகளின் பிள்ளைகள் அனைவரும் கல்வி பயில விழைந்து எண்ணிலடங்கா அறிஞர்கள், வித்தகர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், கல்வியாளர்கள் உருவாகி இந்த நீலமலைக்கு அழகு சேர்ந்தார்கள். ஆரிகவுடர் அவர்களின் ஆழ்ந்த சிந்தனையால் நாட்டிலேயே முதல் முறையாக ஒரு தனிப் பயிருக்குக் கூட்டுறவு சங்கம் கண்ட பெருமையைப் பெற்றேன். எனது பணியை நான் செவ்வனே செய்து வந்த காலக்கட்டத்தில் குளிர்ப் பிரதேசப் பயிராகிய என்னைச் சமவெளியிலும் பயிரிட்டதைக் காரணமாகக் கொண்டு மலைநாட்டில் விளைந்த என் மகிமையை மறைத்துச் சில வியாபாரிகள் செய்த சூழ்ச்சியால் விலை வீழ்ச்சிகண்டு மலையக விவசாயிகள் என்னைப் பயிரிடுவதைப் புறக்கணிக்க, மாற்றுப் பயிரை நாடியவர்கள் இன்று புலம்பெயர்ந்து வாழ்வைத் தேடுவதைக் கண்டு வேதனை அடைகிறேன். நீலகிரியில் பயிரான எனக்குத் தனி மணமுண்டு, சுவையுண்டு. சமவெளிப்பயிரைக் காட்டிலும் என்னையே விவரம் அறிந்த நுகர்வோர் விரும்புகிறார்கள். என்னைச் சுவைக்கக் கூடுதல் விலை கொடுக்கவும் தயாராக உள்ளார்கள். நவீன உலகில் புவிசார் குறியீடு (G.I.Tag) பற்பல பயன் தரும் புரட்சிகளை ஏற்படுத்தி வரும் நிலையில் ஈரோடு மஞ்சளைப் போல எனக்கும் நீலகிரி உருளைக் கிழங்கு எனத் தனி புவிசார் குறியீடு பெற்றீர்களானால் கூடுதல் விலை பெற்றுத் தங்கள் இல்லங்களில் மகிழ்ச்சியை மீட்டெடுத்து நீலகிரியை அலங்கரிக்க என்றும் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு

தங்கள் மனத்திலிருந்து மறைந்த 0காசு. -
ஈத்தொரெ அ.ஜெ.ஜெகதீஷ் குமார்